## DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

## In the Court of the Judicial Magistrate No.II, Usilampatti.

| | |
|---|---|
| **Calendar** | : **Case No.65/2013** |
| **Miscellaneous** | : |
| **Summary Trial** | : |
| **Maintenance** | : |
| **Deposition of witness for prosecution** | : **P.W.2.பிரேமா** |
| **Husband's Name** | : **நாகரத்தினம்** |
| **Village** | : |
| **Taluk** | : |
| **Caste** | : |
| **Calling** | : |
| **Religion** | : |
| **Age** | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 16.12.2019

மு.வி:

நான் தற்போது மதுரையில் வசித்து வருகிறேன். வேலைக்கு எதுவும் செல்லவில்லை. 1வது எதிரி மெய்யப்பனுக்கு சொந்தமான நாகமலைபுதுக்கோட்டையிலிருந்த சொத்தை 2வது எதிரி பவர் பத்திரம் பெற்று அதன் அடிப்படையில் நான் 2007 ஆம் வருடம் கிரையம் வாங்கினேன். வருடம் சரியாக ஞாபகமில்லை. ஒரு வருடம் கழித்து 1வது எதிரி தம்பி என்பவருக்கு பவர் பத்திரம் எழுதிக்கொடுத்து அவர் ஏற்கனவே விற்றுவிட்ட விபரம் தெரியவந்தது. அதனால் அந்த இடத்தை 2வது எதிரியிடமே திரும்ப ஒப்படைத்து விட்டு கிரைய பணத்தை நான் பெற்றுக்கொண்டேன். அதற்கு ஆவணங்கள் எதுவும் எழுதி வாங்கினோமா என்றால் தெரியவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

கு.வி:

நான் கிரையம் வாங்கிய சொத்தின் சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் நான் அப்போது நிறைமாதமாக இருந்த காரணத்தினால் மேற்படி விபரங்கள் பற்றி எனது கணவருக்கு தான் தெரியும். இடம் சம்மந்தமான விபரங்கள் பற்றி என் கணவருக்கு தான் தெரியுமென்றால் எனக்கும் தெரியும். நான் வெங்கடேஷ் என்பவரிடமிருந்து கிரையம் வாங்கினேன். யார் பிரச்சினை செய்து வந்தார்கள் என்ற விபரம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தம்பி மற்றும் பால்பாண்டி பிரச்சினை செய்ததாக என்னிடம் சொன்னார்கள். மெய்யப்பன் மற்றும் ஜெயப்பிரகாஷ் ஆகியோர்களை பற்றி எனக்கு

தெரியாது. பால்பாண்டிக்கு யார் சொத்து பதிந்து கொடுத்தார்கள் என்ற விபரம் பற்றி எனக்கு தெரியாது. நிலம் வாங்கி ஒரு வருடம் கழித்து எனக்கு போலீசார் சொல்லி தெரியும். அவ்வாறு தெரிந்த பிறகு எனக்கு கிரைய தொகையை திரும்ப கொடுத்துவிட்டார்கள் என்றால் சரிதான். 2 மற்றும் 3 எதிரிகளுக்கு மோசடி செய்ய வேண்டும் என்ற எண்ணம் கிடையாது என்றும் அவர்களுக்கு தெரியாமல் தான் பத்திரம் எழுதி வாங்கி கிரையம் செய்து கொடுத்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. அவருக்கு மோசடி செய்ய வேண்டும் என்ற எண்ணம் இருந்திருந்தால் அவர் கிரைய தொகையை திரும்ப கொடுத்திருக்கமாட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் கிரையம் பெற்றபோது வில்லங்கம் போட்டு பார்த்து சரியாக இருப்பதாக தெரிந்து கொண்டு தான் கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். அவ்வாறு வில்லங்கம் போட்ட சமயத்தில் நான் கிரையம் பெற்ற சொத்து வில்லங்கங்கள் எதுவுமில்லை என்றால் சரிதான். பால்பாண்டி என்பவருக்கு ஜெயப்பிரகாஷ் பவர் பத்திரம் எதுவும் எழுதி கொடுக்கவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஜெயப்பிரகாஷ் பத்திர பதிவு காலங்களில் ரஷ்யாவில் நிரந்தர குடியுரிமை பெற்று அங்கு வசித்து வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பால்பாண்டி என்பவர் தன் பெயருக்கு பவர் பத்திரம் சென்னை அலுவலகத்தில் பெற்றுள்ளார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. செக்கானூரணி சார்பதிவாளர் அலுவலகத்தில் மெய்யப்பன் என்பவர் தன்னை மோசடி செய்து பிசிதம்பி பத்திரம் பதிவுசெய்த புகார் சம்மந்தமாக ஆட்சேபணை மனு தாக்கல் செய்த காரணத்தினால் செக்கானூரணி சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திரத்தை பதியாமல் சென்னை சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திரத்தை பதிந்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஜெயப்பிரகாஷ் என்பவர் பால்பாண்டி என்பவருக்கு நேரடியாக பத்திரம் பதிந்து கொடுக்கவில்லை என்றும் ஆள்மாறாட்டம் செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சொத்து சம்மந்தமாக எனக்கு கிரையம் கொடுத்த நபர்களுக்கும் பிரச்சினை செய்த நபர்களுக்கும் சிவில் வழக்குகள் நடந்து வருகிறது என்றால் சரிதான். பால்பாண்டி என்பவர் என்னையும் எதிரியாக சேர்த்து தான் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். என்னை ஏமாற்றி பத்திரம் செய்து கொடுக்க 2 மற்றும் 3 எதிரிகளுக்கு எண்ணம் இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

ம.வி:

இல்லை.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of the Judicial Magistrate No.II, Usilampatti.**

| | |
|---|---|
| **Calendar** | : **Case No.65/2013** |
| **Miscellaneous** | : |
| **Summary Trial** | : |
| **Maintenance** | : |
| **Deposition of witness for prosecution** | : **P.W.3.ரமேஷ்குமார்** |
| **Father's Name** | : **வேலாயுதநாயர்** |
| **Village** | : |
| **Taluk** | : |
| **Caste** | : |
| **Calling** | : |
| **Religion** | : |
| **Age** | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 16.12.2019

மு.வி:

நான் தற்போது மதுரையில் ராகவேந்திரா நகரில் வசித்து வருகிறேன். தினமலர் நாளிதழில் செய்தி ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். 1வது எதிரியிடமிருந்து 2வது எதிரி பவர் எழுதி வாங்கியிருப்பதாக சொல்லி 2வது எதிரியிடமிருந்து என்னுடைய பெயருக்கு 2006 ஆம் வருடம் கொடிக்குளம் எஸ்.எம்.டி நகரில் உள்ள 2300 சதுரஅடி சொத்தை கிரையம் வாங்கினேன். சர்வே எண் தெரியவில்லை. அதன்பிறகு சுமார் 3 மாதங்கள் கழித்து அ.சா.1 பால்பாண்டி என்பவர் விசிதம்பி என்பவருக்கு 1வது எதிரி பவர் பத்திரம் கொடுத்து விசித்தம்பியிடமிருந்து பால்பாண்டி பவர் பெற்றுள்ளார் என்றும் அதனை மறைத்து 2வது எதிரி எனக்கு கிரையம் கொடுத்துள்ளதாக சொன்னார். பின்னர் நான் 2வது எதிரியிடம் சென்று கேட்டதற்கு கிரையத்தை தெரிந்தே கொடுத்ததாக ஒப்புக்கொண்டார். அதனால் 2007 ஆம் வருடம் மீண்டும் அந்த இடத்தை வெங்கடேஷ் என்பவருக்கு ரத்து பத்திரம் எழுதிக்கொடுத்து கிரைய தொகையை திரும்ப பெற்றுக்கொண்டோம். ஆய்வாளர் என்னை காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்.

கு.வி:

நான் கிரையம் வாங்கியபோது வில்லங்க சான்றுதழ் போட்டு பார்த்து அதில் வில்லங்கம் இல்லை என்று தெரிந்து கொண்டு தான் கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். எவ்வளவு காலங்கள் கழித்து பிரச்சினையை தெரிந்து கொண்டேன் என்றால் 3

மாதங்கள் கழித்து பால்பாண்டி வந்து சொல்லி எனக்கு தெரியும். பால்பாண்டிக்கு யார் எழுதிக்கொடுத்தார்கள் என்றால் பிவிதம்பியிடம் கிரையம் பெற்றதாக சொன்னார். மெய்யப்பன் சொத்தை பிபிதம்பி பவர் பெற்று அவரிடமிருந்து பால்பாண்டி கிரையம் பெற்றதாக சொன்னார். பால்பாண்டி எங்கு பத்திரம் பதிவுசெய்தார் என்ற விபரம் பற்றி எனக்கு தெரியாது. எனக்கு விபரம் தெரிந்தவுடன் வெங்கடேஷிடம் கேட்டபோது அவர் ரத்து பத்திரம் எழுதிக்கொடுத்து பணத்தை திரும்ப செலுத்திவிட்டார் என்றால் சரிதான். 2வது எதிரிக்கும் 3வது எதிரிக்கும் எங்களை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணம் இல்லை என்றால் சரிதான். எனக்கு விபரம் தெரிந்தபோது தான் 2 மற்றும் 3வது எதிரிகளுக்கும் விபரம் தெரிந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மெய்யப்பன் என்பவர் செக்கானூரணி சார்பதிவாளர் அலுவலகத்தில் பிசிதம்பி என்பவர் தன்னை ஏமாற்றுவதாக தடங்கல் மனு கொடுத்திருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 2 மற்றும் 3 எதிரிகளுக்கும் பால்பாண்டி என்பவருக்கும் சிவில் வழக்கு நடந்து வருகிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் கிரையம் பெற்ற சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. ஆனால் 2100 சதுர அடியிருக்கும். பால்பாண்டி புகார் கொடுக்கும்போது என்னையும் எதிரியாக சேர்த்து தான் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். மெய்யப்பன் என்பவர் தன்னை மோசடி செய்துவிட்டதாக பிசிதம்பி மீது சென்னை காவல் துறை ஆணையாளரிடம் புகார் கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

ம.வி:

இல்லை.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of the Judicial Magistrate No.II, Usilampatti.**

| | |
|---|---|
| **Calendar** | : **Case No.65/2013** |
| **Miscellaneous** | : |
| **Summary Trial** | : |
| **Maintenance** | : |
| **Deposition of witness for prosecution** | : **P.W.4.தண்டபாணி** |
| **Father's Name** | : **சண்முகவேல்** |
| **Village** | : |
| **Taluk** | : |
| **Caste** | : |
| **Calling** | : |
| **Religion** | : |
| **Age** | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 16.12.2019

மு.வி:

நான் மதுரை பொன்மேனியில் வசித்து வருகிறேன். நான் தினமலர் நாளிதழில் செய்தி ஆசிரியராக வேலை பார்த்து வருகிறேன். எஸ்.எம்.டி நகர் நாகமலை புதுக்கோட்டையில் 1வது எதிரி அவருக்கு சொந்தமான இடத்தை 2வது எதிரிக்கு பவர் எழுதிக்கொடுத்ததின் அடிப்படையில் 2வது எதிரியிடமிருந்து 2006 ஆம் ஆண்டு 4 ½ செண்ட் இடத்தை கிரையம் வாங்கினேன். ஒரு வருடம் கழித்து மேற்படி சொத்தை 1வது எதிரி பிசித்தம்பி என்பவருக்கு பவர் கொடுத்து மேற்படி பிசித்தம்பி ஜெயப்பிரகாஷ் என்பவருக்கு கிரையம் கொடுத்து அந்த சொத்தை ஜெயப்பிரகாஷிடமிருந்து பால்பாண்டி கிரையம் பெற்றார் என தெரியவந்தது. போலீசார் அது குறித்து எங்களிடம் விசாரணை செய்தார். மேற்படி பிசிதம்பிக்கு எழுதிக்கொடுத்த பவர் மற்றும் அதனை தொடர்ந்த கிரையப்பத்திரங்கள் பிறகு தான் எனக்கு தெரியவந்தது. அது குறித்து 2வது எதிரியிடம் கேட்டதற்கு அவர் ஒப்புக்கொண்டு கிரையத்தை ரத்து செய்ய முடிவெடுத்து அதன் அடிப்படையில் கிரைய ரத்து பத்திரம் செய்து பணத்தை திரும்ப பெற்றுக்கொண்டேன். அ.சா.2 மற்றும் 3 ஆகியோர்கள் என்னை போன்று எதிரியிடம் கிரையம் பெற்று பின்னர் ரத்து செய்தார்கள். போலீசார் என்னை இந்த வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள்.

கு.வி:

நான் கிரையம் பெற்றபோது வில்லங்க சான்றிதழ் பார்த்து தான் கிரையம் பெற்றேன்

என்றால் சரிதான். நான் கிரையம் பெற்று ஒரு வருடம் கழித்து பிரச்சினை இருப்பதாக தெரிந்து கொண்டேன். பிரச்சினை இருப்பதாக போலீசார் மூலம் தெரிந்து கொண்டேன். அவ்வாறு பிரச்சினை இருப்பதை தெரிந்தவுடன் எனக்கு கிரையம் கொடுத்த நபர் கிரையத்தை ரத்து செய்து பணத்தை திரும்ப கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். என்னை மோசடி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் அவர் எனக்கு பத்திரம் கொடுக்கவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. அதனால் தான் அவர் பணத்தை திரும்ப கொடுத்துவிட்டு ரத்து பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பால்பாண்டி என்பவர் புகார் கொடுத்ததாக சொன்னார்கள். அந்த சொத்தின் உரிமையாளர் மெய்யப்பன் ஆவார். பால்பாண்டி என்பவருக்கு எழுதிக்கொடுத்தது யார் என்றால் ஜெயப்பிரசாத் என்பவர் எழுதிக்கொடுத்தார். அவர் எங்கு குடியிருந்து வருகிறார் என்ற விபரம் பற்றி எனக்கு தெரியாது. ஜெயப்பிரகாஷ் என்பவர் ரஷ்யாவில் வசித்து வருகிறார் என்றும் பால்பாண்டிக்கு பத்திரம் எழுதி கொடுத்த சமயத்தில் அவர் ரஷ்யாவில் வசித்து வந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பால்பாண்டி ஆள்மாறாட்டம் செய்து தான் பத்திரம் பதிந்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மெய்யப்பனை பிசிதம்பி ஏமாற்றிவிட்டார் என செக்கானூரணி சார்பதிவாளர் அலுவலகத்தில் தடங்கல் மனு கொடுத்துள்ளார் என்றும் அதனால் செக்கானூரணி சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திரம் பதிய இயலாது என்ற காரணத்தினால் சென்னை சார்பதிவாளர் அலுவலகத்தில் பால்பாண்டி பத்திரம் பதிந்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மெய்யப்பன் என்பவர் பிசிதம்பி, பால்பாண்டி, ஜெயபிரகாஷ் ஆகியோர்கள் மீது தன்னை ஏமாற்றிவிட்டதாக சென்னை காவல்துறை ஆணையாளர் அலுவலகத்தில் புகார் கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு கிரையம் கொடுத்த நபர்களுக்கும் பால்பாண்டி என்பவருக்கும் சிவில் வழக்கு நடைபெற்று வருகிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

ம.வி:

இல்லை